THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக** கொலோசெயர் 3:16




நவம்பர் 2009

மரம் 9
கனி 12

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# யோவான் - John



- புதிய ஏற்பாட்டில் ஐந்து புத்தகங்களை எழுதினவன்
- தன்னுடைய சுவிசேஷ புத்தகத்தில் துவக்கத்தையும் முடிவையும் எழுதினவன்
- இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தவன் - யோவா 21:20
- எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது என்றவன் - 1யோவா 1:3
- கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை வெளிப்படுத்தினவன் - 1யோவா 2:25
- அன்பில்லாதவன் தேவனை அறியான் என்றுரைத்தவன் - 1யோவா 4:8
- கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் என்று எழுதினவன் - 2யோவா 9
- தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு தீவுக்கு அனுப்பப்பட்டவன் - வெளி 1:9
- ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதி அனுப்பினவன் - வெளி 1:11
- இதோ, சீக்கிரமாய் வருகிறேன் என்று இவன் எழுதிய புத்தகத்தின் மூலம் கர்த்தராகிய இயேசு திருவுளம்பற்றுகிறார் - வெளி 22:12


# கிறிஸ்துவின் வசனம்

## வழங்கும்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி





தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15

இமயம் *TV* யில் புதன் காலை 6.30 - 6.45


*ரேடியோ நிகழ்ச்சி*



இலங்கை ஆசிய சேவை *SW* 25 மற்றும் 41 மீட்டரில்

ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை

கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்



**Website: www.thewordofchristindia.com**


"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16


**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5. Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 நவம்பர் - 2009 கனி - 12


ஆசிரியருரை

# சிந்தை

## MIND



இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு சகோதரனே, உன்னுடைய சிந்தை எதைப்பற்றியதாக இருக்கிறது? பாவத்தில் கிடக்கும் மனிதனை மீட்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாகவே சிந்தித்தார். அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதிக்கும்போது: "மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்றாம்நாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்" (மாற்.8:31). இதைக் கேட்ட அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பேதுரு என்பவன் அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய், அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான். அதற்கு அவர் "பேதுருவை நோக்கி: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்திக்காமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்று சொல்லி, அவனைக் கடிந்து கொண்டார்" (மாற்.8:33). மனுஷகுமாரன் பாடுபட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட வேண்டியது தேவனுடைய சித்தமாயிருந்தது. வேதவாக்கியங்களும் அந்தப்படியே நிறைவேறியது. இதை அறியாத பேதுரு மனுஷருக்கு ஏற்றபடியாக சிந்தித்து ஆண்டவர் மரிக்கக்கூடாது என்பதற்காக அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய் கடிந்துகொண்டான். இதனை கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைக்கும் அநேகர் இப்படித்தான் தேவனுடைய சித்தத்தை தவறாக புரிந்து கொண்டு இது நடக்கக்கூடாது என்று நினைக்கின்றனர். பிதாவின் சித்தமில்லாமல் ஒன்றும் தரையிலே விழாது என்பதை நாம் ஒருக்காலும் மறந்துபோகவேண்டாம். தேவன் தம்முடைய சித்தத்தின்படியாக ஒவ்வொன்றையும்

செய்துவருகிறார். ஆகையால், நாம் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் பிதாவுக்குரிய காரியங்களையே சிந்திக்கவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலுடைய சிந்தையும் அதுவாகத்தானிருந்தது. ஆனபடியால் பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதும்போது "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்றார்" (பிலி.2:5). இன்று கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட சிந்தை இருக்குமானால் உலகமுழுவதும் தேவனுடைய ஜனங்களாகவே காணப்படுவார்கள். அது எத்தனை ஆனந்தமாக இருக்கும்.

உலகமுழுவதும் தேவனுடைய சுவிசேஷ சத்தியம் சகலஜனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுவருகிறது. ஆகையால், ஒருவரும் அதை எனக்கு சொல்லவில்லை என்று சொல்லிவிடமுடியாது. "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" என்று பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.1:18-21). இப்படியாக அநேகர் தங்களுடைய சிந்தனைகளினாலே வீணராகபோய்க்கொண்டிருக்கிறார்கள். வீணானவைகளை நமஸ்கரித்து வீணாய் ஆராதனைசெய்கிறார்கள்.

தேவன் மனிதனுக்கு சிந்திக்கக்கூடிய ஆற்றலைக் கொடுத்திருக்கிறார். அவன் பூமியில் வாழும் நாட்களில் நலமான காரியங்களைத் தேர்வு செய்யமுடியும். தேவன் மனிதனை ஒரு மிருகத்தைப்போல படைக்கவில்லை. அப்படிப்படைத்திருப்பாரேயானால் அவனும் ஒரு மிருகத்தைப்போல வாழ்ந்துகொண்டே இருப்பான். மனிதன் தேவனுடைய சாயலினால் படைக்கப்பட்டபடியால் மிருகத்திலிருந்து வேறுபட்டவனாகவே காணப்படுகிறான். மிருகம் மிருகமாகவே இன்றுவரை இருந்து வருகிறது. மனிதன் சிந்திக்கும் திறமையுடையவன். இன்று பலவிதமான கண்டுபிடிப்புகள் வருவதற்கு என்ன காரணம்? அவனுடைய முற்போக்கான சிந்தனையே! இப்படி நவீன கண்டுபிடிப்புகள் வளர்ந்து வருகிறவேளையிலும் அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றிவருகிறார்கள். தேவனைக்குறித்து ஜனங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தும் மனிதனுடைய

சிந்தனையானது தேவனுடைய மகிமையை, அழிவுள்ளவைகளுக்கு ஒப்பாக மாற்றி தொழுதுகொள்ளச் செய்கிறது. இதினிமித்தம் தேவன் அப்படிப்பட்டவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். மேலும் அவர் சொல்லும்போது; தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் என்று பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின முதலாம் அதிகாரத்தின் பிற்பகுதியில் வாசிக்கிறோம். உங்களுடைய சிந்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? சிந்திப்பதிலே சிலர் நலமான காரியங்களைக் குறித்து யோசிக்கிறார்கள். அநேகர் தீமையான காரியங்களைக் குறித்து யோசிக்கிறார்கள். சாலொமோன் தன்னுடைய நீதிமொழிகள் புத்தகத்தில் இவ்விதமாக சொல்லுகிறார். "தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்கள்ல்லவோ? நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு" என்கிறார் (நீதி.14:22). இஸ்ரவேலின் முதல் ராஜாவை நாம் அறிவோம். அவன் தாவீதை கொல்ல பல முறை முயற்சித்தான். அப்பொழுது அவனுடைய கைக்கு தாவீதை கர்த்தர் காப்பாற்றினார். ஆனால் சவுலை கொல்ல பல சந்தர்ப்பங்கள் தாவீதுக்கு வந்தது அவனோ அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர், கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக என்று சொல்லி சவுலைக் கொலை செய்யபயந்தான். பார்த்தீர்களா? மேற்கண்ட வசனத்தின்படியாக நன்மையை யோசித்த தாவீதோடு கிருபையும், சத்தியமும் இருந்தது. ஆனால் சவுலுக்கோ அவைகள் கிடைக்காமல் தேவனுடைய ஆவியானவர் அவனை விட்டு விலகினார் என்று காண்கிறோம். அவன் தன் பட்டயத்தை நட்டு அதில் விழுந்து இறந்துபோனான். தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்கள் என்ற வசனத்தின்படி அவன் தேவனுடைய வழியை விட்டு தவறிப்போனான். இவைகள் எல்லாம் நலமான காரியங்களை சிந்திக்கவும், யோசிக்கவும் நமக்குப் படிப்பினையாக இருக்கிறது. எண்ணம்போல் வாழ்வு என்று சொல்வார்கள். உண்மைதான், நாம் நலமான காரியங்களை சிந்தித்தால், நலமான வாழ்க்கை நமக்கு கிடைக்கும். இதினாலே நீடித்த நாட்கள் வாழும் பாக்கியத்தைப்பெறுவோம்.

சத்தியத்தில் பல வருடங்கள் நிலைத்திருக்கிறவர்கள்கூட சிலவேளைகளில் தவறான உபதேசங்களுக்கு செவிகொடுத்து விலகிப்போகிறார்கள். இதைக்குறித்து பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல. புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும். நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்க மாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக்குறித்து

நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனா யிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்" என்கிறார் (கலா.6:7-10). சுவிசேஷம் ஒன்றே, வேறொரு சுவிசேஷம் இல்லை. சிலர் கலகப்படுத்தும்படியாக வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறார்கள், வேதாகமத்திற்கு விரோதமாக செயல்படுகிறார்கள், வேதாகமத்தில் சொல்லப்படாத காரியங்களை சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். ஆகையால் வெளிப்படுத்தின விசேஷபுத்தகத்தில் இப்படியாக நாம் வாசிக்கிறோம். "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது; ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்" என்று வாசிக்கிறோம் (வெளி.22:18,19). இந்த பயம் ஒவ்வொருவருக்கும் இருக்குமானால் யாரும் தேவனுடைய வசனங்களைக் கூட்டிச் சொல்லவோ, அல்லது குறைத்துச் சொல்லவோ முற்படமாட்டார்கள். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்வார்கள். வேத வசனமும் அதையே நமக்குப் போதிக்கிறது.

இரண்டு வகையான சிந்தையைக் குறித்து வேதாகமம் நமக்கு மிகத்தெளிவாகப்போதிக்கிறது. ஒன்று மாம்ச சிந்தை மற்றொன்று ஆவியின் சிந்தை. உங்களுடைய சிந்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? "மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" என்கிறது (ரோம.8:6). மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மேலும் மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். நீங்கள் கிறிஸ்துஇயேசுவுக்குள் இருக்கும்போது ஆவிக்குரிய கிறிஸ்தவராக இருக்கிறீர்கள். உங்கள் சரீரம் கிறிஸ்துவின் சரீரமாயுமிருக்கிறது. கிறிஸ்துஇயேசுவிலிருந்த சிந்தை உங்களில் இருக்கும்போது உங்கள் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படும். நீங்கள் அவருடையவர்களாயிருக்கிறீர்கள். ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. ஆகையால் நீங்கள் ஆவிக்குரியவைகளை சிந்தித்து கர்த்தருக்குள் வளருங்கள்.

நாம் நம்முடைய சிந்தையில் பாவம் செய்ய வாய்ப்புள்ளது. ஆண்டவர் இயேசு இது குறித்துப்பேசும்போது: "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" என்கிறார். பூர்வத்தில் விபசாரஞ் செய்தால்தான் பாவம். ஆனால் புதுஉடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நாம் இருதயத்தில் இச்சைகொண்டு சிந்தித்தாலே பாவம். ஆனபடியால் நம்முடைய சிந்தையை நாம் பாதுகாக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இன்றைக்கு நூற்றுக்கு தொண்ணூறு சதவீதத்தினர் தங்களுடைய சிந்தையில் பாவங்களை செய்துகொண்டே இருக்கின்றனர். இவைகளிலிருந்து நீங்கள் காக்கப்பட உங்கள் சிந்தையை கர்த்தருக்கு நேரே வழிநடத்துங்கள்.





"நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்"

சங்கீதம் 92:12

நீங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்க நேர்ந்தால் புதுப்பாண்டியபுரம் கிறிஸ்துவின் சபையாரோடு கலந்து கொண்டு தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கள்.

உங்களை அன்புடன் வரவேற்கும் சபை ஊழியர் மற்றும் சபையார்.


சகோ.இராஜாமணி, ஊழியர்
கிறிஸ்துவின் சபை, புதுபாண்டியபுரம், கொங்காந்தன்பாறை, திருநெல்வேலி மாவட்டம்.



# கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தருளினார் என நாம் ஏன் விசுவாசிக்கிறோம்?

## Why We Believe That Christ Arose From The Grave

*J.C.Choate*



இயேசு கிறிஸ்து ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார் சிலுவையில் மரித்தார் என்ற உண்மையினை நாம் யாவரும் நிச்சயமாக அறிந்துள்ளோம். அதுவே அதன் முடிவானால் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே அவர் மறக்கடிக்கப்பட்டிருப்பார். ஆனால் அவர் இன்றும் இருதயங்களில் வாழ்கிறார், உலககெங்கிலுமுள்ள ஆயிரக்கணக்கான இன்னும் கோடிக்கணக்கான ஜனங்களின் இருதயங்களில் வாழ்கிறார். ஏன்? அவர் கொடூரமான சிலுவையின்மேல் ஆணியறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாட்கள் கழித்து கல்லறையிலிருந்து எழுந்தருளினார் என்ற ஒரே காரணத்திற்காகவே! ஆனபடியினால் நாம் இன்றும் கூட கிறிஸ்து மரித்துப்போனது மட்டுமல்ல, ஆனால் அவர் மரணத்திலிருந்து உயிரோடெழுப்பப்பட்டார் எனவும் அறிவித்துக்கொண்டிருக்கிறோம். அதனாலேயே எபிரெய ஆசிரியரோடு கூட நாமும், "இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி.13:8) என்று கூறமுடிகிறது.

கிறிஸ்து வாழ்ந்த காலத்திலுங்கூட அவர் தாமே மரணத்திலிருந்து உயிர்த்தெழுவேன் என வாக்களித்தார். அவர், "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்". அப்பொழுது யூதர்கள் அவர் எருசலேமிலிருந்த தேவாலயக் கட்டடத்தைக் குறித்துப் பேசுகிறார் என நினைத்து அவர்கள், "இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்" (யோவா.2:19-21). மீண்டும் நாம், "அது முதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" (மத்.16:21) என வாசிக்கிறோம். அந்த சமயம் சீஷர்கள் இந்தக் கூற்றினுடைய முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளவில்லை, ஆனால் அந்த நாள் நிறைவேறினபோது அவர்கள் தாமே கிறிஸ்து உயிர்த்தெழுந்த கர்த்தர் என்ற உண்மையினையும் அவர் அவர்களுக்குச் சொல்லியிருந்ததை அவர்கள் நினைவுகூர்ந்து, அறிந்துகொண்டு அதைக்குறித்தும் சாட்சிபகர்ந்தனர்.

கிறிஸ்து அநீதியாகதீர்ப்பு செய்யப்பட்ட பிறகு, சிலுவையின் மேல் ஆணியறையப்பட்டு, மகா கொடிய வேதனையோடு மரணமடைந்தார், வேதம்

"சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக்கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து; கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான்" (மத்28:57-60) என்று கூறுகிறது. இந்தக் குறிப்பில் இதுவே இயேசுவினுடைய முடிவு என்பது போல் தோற்றமளிக்கிறது. சீஷர்களும்கூட, இது ஏற்றுக் கொள்ளக் கூடியது போல் காணப்பட்டதாலும், அவர்கள் தங்களுடைய பழைய நிலைக்குத் திரும்பிச்செல்ல எண்ணங்கொள்ள ஆரம்பித்தார்கள். இவையெல்லாவற்றிற்கும் மாறாக இயேசு கல்லறையிலிருந்து திரும்பவும் உயிர்த்தெழுந்து வருவேன் என்று கூறியதைப் பற்றி இயேசுவின் பகைஞர்கள் மறந்துபோகவில்லை. ஆனபடியினால் "ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடவந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும் போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடியதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்" (மத்.27:62-66) என்று வாசிக்கிறோம்.

தயவுசெய்து தொடர்ந்து கவனியுங்கள், கிறிஸ்து உண்மையாகவே கல்லறையிலிருந்து எழுந்திருப்பாரென்று அவர்கள் நம்பவில்லை, ஆனால் சீஷர்கள் வந்து அவரை களவாடிக் கொண்டு போய்விடுவார்கள் என்று அவர்கள் பயந்தார்கள், மேலும் அதன் விளைவாக இயேசுவினுடைய புகழ் முன்பைக் காட்டிலும் இன்னும் அதிகமாகப் பரவிவிடும் என்றும் பயந்தார்கள். இது நடைபெறவில்லையென உறுதிசெய்யும் படிக்கும், கல்லறை ஒழுங்காக முத்திரை போடப்பட்டுள்ளதை உறுதிசெய்யும்படிக்கும் அவர்கள் கல்லறைக்குச் சென்றார்கள், அதன் பிறகு அங்கே இரண்டு பேரை காவல்காக்கும்படி விட்டுச் சென்றார்கள்.

இப்பொழுது நாம் தொடர்ந்து வாசிப்போம் இது, "ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம்

மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள், துதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்" (மத்.28:1-10) என்கிறது. இப்போது இது சீஷர்கள் ஏற்கனவே இயேசுவின் சரீரத்தைக் களவாடிப் போகும்படி திட்டமிட்டிருந்தார்கள் என்பதான அவர்களுடைய கருத்தை ஊர்ஜிதப்படுத்தவில்லை. இன்னும் சரியாகக் கூறினால், அவர்கள் காவல்சேவகர்கள் பிரமித்ததுபோல் பிரமித்தார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது. ஆரம்பத்தில் சில சீஷர்கள் கூட சந்தேகப்பட்டார்கள். துவக்கத்தில் அப்போஸ்தலர்களில் சிலரும் கூட சந்தேகித்தனர்.

தொடர்ந்து வாசிக்கையில் மாறுபட்ட கருத்துள்ள காவலாளர் உயிர்த்தெழுந்த இக்காட்சியினை எவ்விதம் சமாளித்தனர் என்பதைக் காணலாம். நாம், "அவர்கள் போகையில், காவல்சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். இவர்கள் மூப்பரோடே கூடவந்து, ஆலோசனை பண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து; நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள், இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள். அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது" (மத்28:11-15) எனச் சொல்லப்படுகிறது. இப்போது இங்கே என்ன நடந்தது என்பதைப் பற்றி சிந்தியுங்கள். நாம் முன்னால் சொன்ன வசனங்களை வாசிக்கையில், கல்லறையைக் காவல் காக்கும்படி சென்றவர்கள் அங்கே என்ன சம்பவித்தது என்பதுபற்றி மிகவும் நன்றாக அறிந்திருந்தார்கள். தூதன் கல்லைப் புரட்டிப் போடும்படி தோன்றிய போது, அவர்கள் மிகவும் பயமடைந்தார்கள், அவர்கள் நடுங்கினார்கள், அவர்கள் செத்தவர்களைப்

போலானார்கள். பின்பு இவையனைத்திற்கும் பிறகு, சம்பவித்தது என்ன என்பதைப்பற்றி பிரதான ஆசாரியனுக்குச் சொல்லும்படி நகரத்திற்குள் பிரவேசித்தார்கள். இதற்கும் மேலாக நேர்மையாயிருக்கவும், இயேசு மெய்யாகவே கல்லறையை விட்டு உயிர்த்தெழுந்தார் என்பதை ஒத்துக்கொள்ளவும், மூப்பர்களோடு கூடி, இதைக் குறித்து விவாதித்து அதன் பின் அந்த மனிதருக்கு மிகப்பெரும் தொகையாக பணம் கொடுக்கப்பட்டு, அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது கிறிஸ்துவினுடைய சீஷர்கள் வந்து களவாடிச் சென்று விட்டார்கள் என எங்கும் சொல்லும்படி அறிவுறுத்தப்பட்டார்கள் இந்தச் செயல் அவர்கள் பொய்சொல்லும்படிக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டார்கள் என பொருள்படுகிறது. அது மெய்யாகவே சம்பவித்திராதிருந்திருக்குமானால் அவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது மேலும் அந்தக் காவலாளிகள் பொய் சொல்லியிருந்திருக்கவுமாட்டார்கள். ஆனாலும், காவல்சேவகர் தூங்கிக் கொண்டிருந்த போது கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய சரீரத்தைக் களவாடிச் செல்ல இடம் கொடுப்பது அவர்களுக்கு எவ்வாறு பொருத்தமுடையதாயிருக்கும்? இதுபோன்ற காரியங்களில், காவல்சேவகர் தங்கள் பணிகளில் தூங்கிய குற்றத்திற்காக தங்களுடைய ஜீவனையே இழந்திருக்க வேண்டும். கண்டிப்பாக, மூப்பர்கள், கவர்னருடைய காதுகளுக்கு இவ்விஷயம் சென்று விடும் அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளும்படி கவர்னருக்கு இதுகுறித்து விளக்கமளிக்க வேண்டுமென இந்த மனிதரை பயமுறுத்தினார்கள்.

இது விந்தையாகயிருக்கலாம், ஆனால் இன்றும்கூட இயேசு உண்மையாகவே சிலுவையில் மரிக்கவில்லை என்றும் ஆனபடியினால், கல்லறையிலிருக்கையில்; இரவிலே அவர் காணாமற்போய் விட்டார் அல்லது அவருடைய சீஷர்கள் களவாடி போய்விட்டார்கள் என்றும் கூறுகிறவர்கள் உண்டு. அது அபத்தமானது. கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந் தார் என்ற உண்மையினை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் அத்தோடு வேதாகமம் முழுவதும் நிரூபிக்கிறது. அது மாத்திரமல்ல, இரட்சிப்பு, ஞானஸ்நானம், சபை, கர்த்தருடைய பந்தி, மேலும் கிறிஸ்தவம் பொதுவாக எல்லாம் அதனதன் நிலைத்தன்மையும் சிறப்பும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. பரிசுத்த வேதம் மாற்றமடைந்துள்ளது ஆகவேதான் இவைகளை எல்லாம் இது போதிக்கிறது என்று கூறுகிறவர்கள் உண்டு. ஆனால் இதை யார் மாற்றியிருக்கிறார்கள்? யூதர்களல்ல, ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. அந்த சமயத்தில் வேதவாக்கியங்கள் நிறைவேறியது, யூதரல்லாதவர்கள் முழுவதுமாக நாத்திகர்களைப் போல செயல்பட்டனர். அதற்கு மேலும், கி.மு.200க்கு திரும்ப அழைத்துச்செல்லும் வேதாகமக் குறிப்புகளை, குறிப்பாக பழைய ஏற்பாட்டுப் பகுதியினையும் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, வேதாகமம் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது, மேலும் அது தேவனுடைய பரிசுத்த வார்த்தை; அது திட்டவட்டமாக கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தாரென போதிக்கிறது.

பவுல், "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப் படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" (1கொரி.15:1-8) என எழுதினான்.

இப்போது யார் அந்த பவுல்? கிறிஸ்தவனாய் மாறுவதற்கு முன் சவுல் என்று அழைக்கப்பட்டவன் தான். அவன் ஒரு யூதனாயிருந்தான், கமாலியேலின் பாதத்தில் கற்றறிந்தவன், ஒரு பரிசேயன், தன்னுடைய சமயத்தில் பக்திவைராக்கியமாயிருந்தவன் (பிலி.3:4-7). அந்தபடியே, சபையைத் துன்பப்படுத்தினவன், அதாவது, கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகும்வரை. பின்பு அவன் கிறிஸ்துவினிடத்தில் திருப்பப்பட்டான் (அப்.9:22). அதன்பின் அவன் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் உயிர்த்தெழுந்த கர்த்தரென்றும் பிரசங்கித்தான் (அப்.9:20; 17:18). ஒரு அவிசுவாசியாயிருக்கும் நிலையிலிருந்து விசுவாசியாக மாறுவதற்கு மிகத்துரிதமாகவும் சடுதியாகவும் திரும்புவது நம்புவதற்கு ஏதுவல்லாத நடக்கக் கூடாததாயிருந்திருக்கும் நிலையில், கிறிஸ்துவை தரிசிக்கையில், அவன் மெய்யாகவே கிறிஸ்து உயிர்த்தெழுந்த கர்த்தர் என்று உணர்ந்தான்.

உங்களுடைய நிலை என்ன? நீங்கள் கிறிஸ்து கல்லறையிலிருந்து எழுந்தாரென விசுவாசிக்கிறீர்களா? அவர் இன்றும் ஜீவிக்கிறார், ஒருநாளில் சபையாகிய தம்முடைய ஜனங்களுக்காகத் திரும்பி வருவார் என விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் ஒரு விசுவாசியாயிராவிட்டால், நீங்கள் விசுவாசியாக மாறும்படி உங்களுக்காக ஜெபிக்கிறோம். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (மாற்.16:16; அப்.2:47).

பெண்கள் பகுதி

# ராகாப் புதிய ஏற்பாட்டில் ஏன் நினைவுகூரப்படுகிறாள்?

## Why is Rahab remembered in New Testament?

*J.Glory Arjunan*



பாவமான வழியில் நடந்து கொண்டிருந்த வேசியான ராகாப் தேவனைக் குறித்தும் தேவனுடைய வல்லமையைக் குறித்தும் அறிந்திருந்தாள். யோசுவா, எரிகோ பட்டணத்தை வேவுபார்க்கும்படி இரண்டு மனுஷரை அந்த தேசத்திற்கு அனுப்பினான். அப்போது இந்த வேசியான ராகாப் இஸ்ரவேலரின் சேனை தம்முடைய பட்டணத்தைப் பிடிக்க வரப்போகிறதே என்று எண்ணி கலக்கம் அடைந்திருந்தாள். "கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தாரென்றும். உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது; கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம்பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று, **உங்கள் தேவனாகிய கர்த்தரே உயரவானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்**" (யோசு.2:9-11) என்று சொல்லி வேவு பார்க்க வந்த இஸ்ரவேல் மனுஷருக்குப் பட்டணத்தைப் பிடிக்க உதவினாள்.

ஆம் தான் வசித்து வந்த பட்டணத்தைப் பிடிக்க மற்ற ஜனங்களுக்கு உதவினாள். காரணம் என்ன தெரியுமா? இஸ்ரவேல் ஜனங்களுடைய தேவனாகிய கர்த்தரின் வல்லமைகளை அறிந்திருந்தாள். சேனைகளின் கர்த்தர் ஜெயபலமானவர் என அறிந்திருந்தாள். அது மாத்திரமல்ல கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தன்னுடைய தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், தங்களுடைய இருதயம் கரைந்து போயிற்று, தைரியமும் அற்றுப்போயிற்று, உங்கள் தேவனாகிய கர்த்தரே உயரவானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர், இவரே தன்னையும் தன் குடும்பத்தையும் இரட்சிக்கவல்லவர் என்றும் விசுவாசித்தாள். இவள் ஒரு வேசி. எல்லாராலும் அற்பமாகவும் அருவருப்பாகவும் கூட எண்ணப்பட்டிருப்பாள். ஆனால் இவளோ கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர் என்று அறிக்கையிட்டாள். கர்த்தருடைய செயல்களை நினைத்து கலக்கமடைந்தவளாயுமிருந்தாள். பயந்து நடுங்கி அத்தோடு அழிந்து போனாளா? இல்லை. அவள் எப்போது கர்த்தருடைய வல்லமையை அறிந்து அவரே தேவன் என அறிக்கையிட்டாளோ, அப்போதே அவள் கிரியை நடப்பிக்க ஆரம்பித்தாள். ஆம்,

அவள் வெறுமனே கர்த்தரே தேவன் என்று விசுவாசிக்கவில்லை, தன்னுடைய விசுவாசத்தை தன் கிரியையில் காண்பித்தாள். 'விசுவாசத்தினால் ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகா திருந்தாள் என எபி.11:31 கூறுகிறது.

அநேகர் கர்த்தர் பெரியவர், அவர் வல்லவர் அவர் ஒருவரே தேவன் என்றெல்லாம் விசுவாசிக்கின்றனர். ஏன் கர்த்தருக்குப் பயப்படுகின்றனர்! ஆனால் கீழ்ப்படிவதில்லை. அன்பு சகோதரியே, "தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது தான்: பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" (யாக்.2:19). அன்றைய நாளில் ராகாபின் இருதயம் மட்டும் கரைந்து போகவில்லை. எரிகோ பட்டணத்தார் அனைவரின் இருதயங்களும் கரைந்து போயின. கீழ்ப்படியாதவர்கள் சேதமடைந்தார்கள். கீழ்ப்படிந்த ராகாபோ தன்னுடைய குடும்பத்தாரோடுங்கூட காக்கப்பட்டாள். இதை வாசிக்கிற சகோதரியே உங்கள் குடும்பமுழுவதும் காக்கப்பட இவளைப்போல விசுவாசித்து கிரியை நடப்பித்து இரட்சிக்கப்படுங்கள். கிரியையில்லாத விசுவாசம் செத்தது. இவள் சந்ததியில் பரிசுத்தராகிய இயேசு வந்தார் (மத்.1:5). இவளுடைய கிரியையுள்ள விசுவாசத்தினால் புதிய ஏற்பாட்டில் இடம்பெற காரணமானாள்.

## தேவனுடைய வார்த்தை சுருக்கிக் கூறப்பட்டுள்ளது
## God's Word Summarized




*இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது*
*தேவனுடைய மனதை,*
*மனிதனுடைய நிலையை,*
*இரட்சிப்பின் வழியை,*
*விசுவாசிகளின் மகிழ்ச்சியை*

*இதனுடைய கோட்பாடுகள் பரிசுத்தமானவை,*
*இதனுடைய கற்பனைகள் பரிசுத்தமானவை,*
*இதனுடைய வரலாறுகள் உண்மையானவை,*
*இதனுடைய தீர்ப்புகள் மாறாதவை*

*வாசி இதை ஞானமடைய,*
*விசுவாசி இதை இரட்சிப்படைய,*
*பயிற்சிசெய் இதை பரிசுத்தமடைய.*

*இது கொண்டுள்ளவைகள்:*
*ஒளி உன்னை வழிநடத்த,*
*போஜனம் உன்னை போஷிக்க,*
*ஆறுதல் உன்னை உற்சாகப்படுத்த.*

*இது வழிப்போக்கனின் வரைபடம்,*
*புனித பயணியின் ஆதாரம்,*
*விமானியின் திசைகாட்டி,*

படைவீரனின் வாள்,
கிறிஸ்தவனின் கதாபாத்திரம்
இங்கே
பரதீசு முன்நிலையில் வைக்கப்பட்டுள்ளது,
பரலோகம் திறக்கப்பட்டுள்ளது,
நகரத்தின் கதவுகள் மூடப்பட்டிருக்கவில்லை.

கிறிஸ்து இதனுடைய மிகப்பெரிய சாராம்சம்,
நம்முடைய நன்மை இதனுடைய வரிவடிவம்
தேவனுடைய மகிமை இதனுடைய முடிவு

இது

மனதை நிரப்பும்,
இதயத்தை ஆளும்,
கால்களை நடத்தும்

இதை வாசி
நிதானமாக,
அடிக்கடி,
ஜெபத்தோடு.

இது
ஒரு செல்வத்தின் சுரங்கம்,
ஒரு மகிமையின் பரதீசு,
ஒரு இனிமையின் நதி.


இது
வாழ்வில் உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது,
நியாயத்தீர்ப்பிலே திறக்கப்படும்,
என்றென்றும் நினைக்கப்படும்.

இது
சம்பந்தப்படுகிறது மாபெரிய பொறுப்போடு
வெகுமதியளிக்கிறது மிகப்பெரிய உழைப்பிற்கு
கண்டிக்கிறது இதன் பரிசுத்தக்காரியங்களை
அசட்டைப் பண்ணுகிறவர்களை.

**-The Voice of Truth International.**


**2010–ம் வருட காலண்டர் தேவைக்கு**

**தொடர்பு கொள்ளவும்**




உங்களுடைய சபை தொழுகை விவரம் மற்றும்

முகவரியுடன் அச்சிட்டு கொடுக்கப்படும்

தொடர்புக்கு



**S.David Martin - 98404 25080**



# ஜெபம்

## Prayer

ஜெபம்பண்ண ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்தார் என்பதை மத்தேயு6-ம் அதிகாரம் 9-ம் வசனத்திலிருந்து வாசிக்கிறோம். அந்த ஜெபமானது அப்போதைக்கு தேவையான ஒரு ஜெபமாக இருந்தது. அதே ஜெபத்தை நாமும் இன்று சொல்லிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை.

ஜெபத்தின் மூலம் நாம் தேவனோடு பேசுகிறோம். நம்முடைய தேவைகளை தேவனுக்குத் தெரியப்படுத்துகிறோம். அவருக்கு தெரியாத ஒன்றா என்று நாம் ஜெபிக்காமல் இருந்துவிடக்கூடாது. அப்போஸ்தலனாகிய பவுல் "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" என்று 1தெச.5:17-ல் குறிப்பிட்டுள்ளார். ஆகையால் உங்களுக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஜெபியுங்கள். இயேசுவின் நாமத்தினால் இயேசுவின் மூலமாக ஜெபியுங்கள். ஆண்டவர் இயேசு இது குறித்துபேசும்போது; "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத்தருவார்" என்றார் (யோவா.16:23). அநேகர் ஜெபிக்கும்போது இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்தபடி ஜெபிப்பதில்லை. இயேசுவை நோக்கியே ஜெபிக்கின்றனர். இது என்ன தவறா? என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பும். இயேசுகிறிஸ்து சொல்லாத ஒன்றை நாம் செய்வது தவறல்லவா? அவர் சொல்லியிருக்கிற வசனத்தின்படி நாம் ஜெபிக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). சிலர் இயேசுவின் நாமத்தின் மூலம் ஜெபிக்காமலே தேவனை நோக்கி ஜெபித்து முடித்திடுவார்கள். அதுவும் தவறான ஒன்றாகவே இருக்கிறது. இயேசுவே நமக்காக ஜீவனைக் கொடுத்தவர், அவரே; "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை ஏற்படுத்தியவர்" (எபி.10:19). இயேசுவை பிதாவாகிய தேவன் முன்குறித்தார். ஆகையால் நீங்கள் ஆண்டவர் இயேசுவின் மூலமாக ஜெபித்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பத்திரிக்கை வாசகர்களும், தொலைக்காட்சி நேயர்களும், வானொலி நேயர்களும் எங்களோடு தொடர்பு கொள்ளும்போது; தாங்கள் அறிந்துகொண்ட சத்தியத்தை குறித்து எங்களோடு தொடர்பு கொள்ளாமல் எங்களுக்காக ஜெபியுங்கள் என்று சொல்லுகிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அன்பானவர்களே, நாம் தேவனை நோக்கி இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க, அவரை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறார் என்பதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். நாங்கள் ஜெபித்தால் தான் கர்த்தர் கேட்பார் என்பது அல்ல. நாங்களும் ஜெபிக்கிறோம். அதேவேளையில் நீங்களும் ஆண்டவருடைய கட்டளைப்படி நடந்து, கர்த்தருக்குப்பிரியமாய் வாழ்ந்து ஜெபிக்கின்றவர்களாக

இருப்பது நல்லது. "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.7:14). அந்த வல்லவர் மூலமாக ஜெபியுங்கள். அவர் எப்பொழுதும் உங்களுக்காக பிதாவாகிய தேவனைநோக்கி வேண்டிக் கொண்டிருக்கிறார்.

ஆபத்தான சூழ்நிலையில் நீங்கள் இருப்பீர்கள் என்றால் என்னாலும், நீங்கள் நேசித்தவர்களாலுங்கூட உங்களை அந்தவேளையில் வந்து காப்பாற்ற முடியாது. ஆனால் உங்களை பாவத்திலிருந்து மீட்டெடுத்த ஆண்டவர் இயேசுவினால் அது கூடும். அவர் சொல்லியிருக்கிறார். "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று மத்.28:20. சகல நாட்களிலும் அவர் உங்களோடுகூட இருப்பதால் நீங்கள் கலங்கவேண்டிய அவசியம் இல்லை. உபத்திரவத்தில் நீங்கள் சிக்குண்டாலும் உங்களைக் காக்க கர்த்தர் உங்களோடிருப்பார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். "நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" என வேதம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது (கலா.4:6,7). நீ தேவனுடைய குமாரன். அவருடைய குமாரனாகிய இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக உன்னை மாற்றி வைத்திருக்கிறார். கலங்காமல் தேவனை நோக்கி ஜெபி. உனக்காக மட்டுமல்ல, உன் குடும்பத்திற்காக, உன் நாட்டிற்காக ஜெபி. தேவன் உன்னுடைய ஜெபத்தை கேட்டு நன்மையான ஈவுகளை உனக்கு கொடுப்பார். உங்களுக்காக நாங்களும் ஜெபிக்கிறோம்.

## வேத அறிவுப்போட்டி எண் 110 -ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| A. ஆனந்த் -மதுரை | R. பவுல் சாமுவேல் -சென்னிமலை |
| J. பேசில் தேவசகாயம் -மதுரை | Mrs. மெல்சிடா-திண்டுக்கல் |
| G.பூங்கோதை - கோபி | Tmt. மரகதம் திரவியம்-கோம்பை |
| S. பாக்கியராஜ் -திண்டுக்கல் | N. ஜான் செல்லையா-நியூஎல்லீஸ்நகர் |
| M. ஏஞ்சல் -பெருந்துறை | J. ஐசக் -திருநெல்வேலி |
| R. அருண்குமார் -சென்னிமலை | R. சரோஜா -திருநெல்வேலி |
| V.F. ஷர்லோ -பாண்டி | S. சாந்தா சாமுவேல்-ஊதியூர் |
| Mrs. ஜாஸ்மின் வின்சென்ட்ராஜ் -மதுரை | N. கமலவேணி -சென்னை |
| | J. நிர்மலா ஜான் -மதுரை |

## வேத அறிவுப்போட்டி எண் 110 -ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. எலிகூ | -யோபு | 6. எயோதியாள், சிந்திகேயாள் | - பிலி.4:2 |
| 2. இல்லை | -கலா.3:25 | 7. எஸ்றா | -எஸ்.7:28 |
| 3. யூதமார்க்கத்தில் | -எஸ்.8:17 | 8. ஆம் | -கொலோ.4:7 |
| 4. களைந்து | -எபே.4:22 | 9. தாவீது | -2 சாமு.22:22 |
| 5. நெகேமியாவின் | -நெகே.10:33 | 10. இல்லை | -1 தெச.4:15 |

# நீங்களே தேவனுடைய ஆலயம்
## You Are The Temple of God

*K.Ramraj, Church of Christ*
*Nanjiampalayam -638 657*
*Dharapuram, TIRUPUR DT*

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசக சகோதர சகோதரிகளுக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக, இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அப்பொழுது யூதர்கள் இந்த ஆலயத்தை கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ? என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துச் சொன்னார். அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் நினைவு கூர்ந்து வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள் (யோவா.2:19-22).

நாம் வாசித்த வேதபகுதியில் 22-ம் வசனத்திலிருந்து வேதவாக்கியம் என்ன சொல்கிறது, இயேசு சொன்ன வசனம் என்ன என்பதை குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அதாவது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு சொல்வதை நாம் தியானிக்கலாம். தேவன் வாசம்பண்ணும் இடத்தைக்குறித்து தேவன் இப்படியாக நமக்கு சொல்கிறார். நான் இஸ்ரவேல் புத்திரரை புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல் கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன் 2சாமு.7:6. இந்த வசனம் இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீதின் நாட்களில் தேவன் நாத்தான்வேலுவினிடத்தில் பேசுகிறதாயிருக்கிறது. எனவே தாவீது இராஜா வரைக்கும் தேவனுக்கென்று ஒரு ஆலயம் கட்டப்பட வில்லை என்பது தெரிகிறது. அதுவரை தேவன் ஒரு கூடாரத்தை உண்டாக்கச் சொல்லி அதிலே அவர் மோசேயினிடத்தில் எழுதிக் கொடுத்த நியாயப்பிரமாணங்கள் அடங்கிய இரண்டு கற்பலகைகளும், ஆரோனுடைய துளிர்த்த கோலும், தேவனுடைய பெட்டியையும் வைக்கச் சொல்லியிருந்தார். மேலும், ஜனங்கள் தேவனுக்கென்று பலியிட்டு அதின் இரத்தத்தை பிரதான ஆசாரியன் கூடாரத்திற்குள் கொண்டுபோய் அங்கு வைக்கப்பட்டிருக்கிற தேவனுடைய பெட்டியின் மேல் தெளிக்க வேண்டும். அப்பொழுது தேவனுடைய வார்த்தை அந்த இடத்தில் ஒளிக்கும் அந்த வார்த்தைகளை பிரதான ஆசாரியன் கேட்டு தேவ ஜனங்களுக்கு சொன்ன வார்த்தைகளை அவர்களுக்கு அறிவிப்பான். இப்படித்தான் தேவனை ஜனங்கள் தொழுதுகொண்டு வந்தார்கள் (யாத்.25-31). தாவீது, நான் கேதுருமரங்களால்

செய்யப்பட்ட வீட்டில் வாசம்பண்ணும்போது தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே என்று சொல்லி தேவனுக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்ட நினைத்தான். அப்பொழுது தேவன் நாத்தான்வேல் மூலமாய் தாவீதுக்குச் சொன்ன வார்த்தை என்னவென்றால்; நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்கு கட்டுவாயோ என்றார் 2சாமு.7:1-5. மேலும், தேவன் தாவீதுக்குச் சொல்கிறார். உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப் பண்ணுவேன் அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தை கட்டுவான் என்றார் 2சாமு.7:12,13.

அந்தப்படி தாவீதின் குமாரன் சாலமோன் ராஜா வந்து தேவனுக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டினான். அதைக் கட்டிமுடிக்க 7வருஷம் ஆனது 1இராஜா.6:38. இப்படி கட்டிமுடிக்கப்பட்ட ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணும்போது சாலமோன் ராஜா தேவனிடத்தில் ஜெபித்து சொன்ன வார்த்தைகள் என்னவென்றால் இஸ்ரவேலின் தேவனே என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தைகள் மெய்யென்று விளங்குவதாக, தேவன் மெய்யாகவே பூமியிலே வாசம்பண்ணுவாரோ, இதோ வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்? என்று சொல்லி ஜெபிக்கிறான் 1இராஜா.8:26,27.

சாலமோன் கர்த்தருக்கு சமாதான பலிகளாக இருபத்தீராயிரம் மாடுகளையும் இலட்சத்திபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டு ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணினான். மேற்கண்ட சம்பவங்களிலிருந்து தேவன் மெய்யாகவே ஒரு ஆலயத்தில் வாசம் பண்ணுகிறதில்லை என்பது தெரிகிறது. எனவேதான் பவுல் மூலமாக பரிசுத்த ஆவியானவர் இப்படிச்சொல்லுகிறார்; உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானது போல மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை அப்.17:24,25 என்கிறார். தேவனை நாம் தொழுதுகொள்ளுவதற்கென்று கட்டப்பட்டுள்ள அந்த இடம் பரிசுத்தமாய் இருக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து விரும்பினார் எனவேதான் அவர் என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் அதைக் கள்ளர் குகையாக்கினீர் என்று கோபப்பட்டார் மத்.21:12,13.

மேலும், தேவன் மோசேயினிடத்தில் சொன்னது நான் உங்கள் நடுவிலே உலாவி உங்கள் தேவனாயிருப்பேன் நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் லேவி.26:12 என்று சொல்கிறார். எனவே தேவன் ஒரு கட்டிடத்தில் வாசம்பண்ணுகிறேன் என்று சொல்கிறதில்லை. இயேசு கிறிஸ்துவும், இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடுகிறீர்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்

என்கிறார் (மத்.18:20). ஆக எந்த இடத்திலே நாம் கூடுகிறோமோ அந்த வேளையில் அந்த இடத்தில் நமக்கு நடுவே அவர் இருக்கிறார். 2கொரி.6:16-ல் தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது என்று பரிசுத்த ஆவியானவர் பவுல்மூலமாய் நம்மை பார்த்து கேட்கிறார். ஆம் தேவனுடைய பிள்ளைகளே நம்முடைய தேவன் ஜீவனுள்ளவராய் இருக்கிறார். பேசுகிறவராய் உலாவுகிறவராய் இருக்கிறார். இப்படியிருக்கிற கண் இருந்தும் பார்க்காத, காதுகள் இருந்தும் கேட்காத கால்களிலிருந்தும நடக்காத, மூக்கிருந்தும் முகராத ஜடப் பொருளாகிய விக்கிரகங்கள் அடங்கியிருப்பது போல ஒரு கட்டிடத்திற்குள் அடங்கியிருப்பாரா நம் தேவன்? நம்முடைய தேவன் நமக்கு ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிறார். அவருக்கு நாம் எந்த வேலையும் செய்து கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் ஜடப்பொருளாகிய விக்கிரகங்களை கடவுள் என்று தொழுகிற ஜனங்கள் தான் அவைகளுக்கு குளித்துவிடவேண்டும், உடுத்திவிடவேண்டும், இடமாற்றி தூக்கி வைக்கவேண்டும். அவைகளை இரும்புக்கம்பிகளுக்குள்ளே பூட்டி பாதுகாக்க வேண்டும்.

நம்முடைய தேவன் நம்முடைய சரீரத்தையே அவருடைய ஆலயம் என்கிறார். நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் (2கொரி.6:16). உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (1கொரி. 6:19). நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே அந்த ஆலயம் (1கொரி.3:16,17).

எனவேதான் இயேசுகிறிஸ்து தேவன் தம்முடைய சரீரத்திலே வாசம்பண்ணுகிறாரென்றும், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம்பண்ணுகிறதில்லை என்பதை உணர்ந்திருந்தார். ஆகவே தேவன் வாசம் பண்ணுகிற என்னுடைய சரீரத்தை (ஆலயத்தை) கொன்று போடுங்கள் நான் மூன்று நாளைக்குள்ளே உயிரோடு எழுப்புவேன் என்பதைத்தான் இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள் மூன்று நாளைக்குள்ளே எழுப்புவேன் என்றார். இதை அந்த ஜனங்கள் (சீஷர்கள்) இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்ப உணர்ந்து அவர் சொன்ன வசனத்தை விசுவாசித்தார்கள். ஆகையால் கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, தேவன் அங்கே இருக்கிறார், இங்கே இருக்கிறார் என்று உலக மக்கள் ஓடுவதைப்போல நீங்களும் ஓடாதிருங்கள் தேவன் உங்கள் சரீரத்தையே ஆலயமாக தெரிந்து கொண்டிருக்கிறார். உங்கள் நடுவில் உலாவுகிறார் என்பதை உணர்ந்து உங்கள் சரீரத்தை பரிசுத்தமுள்ளதாய் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (ரோ.12:1).

## நடப்புச் செய்திகள்

✡ அடுத்த ஆண்டில் ரூ.10 ஆயிரம் விலையில் போன் வசதியுடன் கூடிய கம்ப்யூட்டர் அறிமுகம் செய்யப்படும் என குவால்காம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

✡ பொது இடங்களில் புகைபிடிக்க தடையை பெரும்பான்மையான இந்தியர்கள் வரவேற்கின்றனர்.

✡ திண்டுக்கல் ஆயுதப்படையில் காவலராக பணிபுரியும் மாரியப்பன், பற்களால் 68.5 கிலோ எடையை 40 வினாடிகள் தூக்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

✡ தேசிய நெடுஞ்சாலைகளில் இருபுறமும் ஓய்வு விடுதிகள் 500 இடங்களில் அமைக்க திட்டம்.

✡ கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 2010 ஜூன் முதல் மின் உற்பத்தி தொடங்கும் என நிலைய இயக்குனர் காசிநாத் பாலாஜி தெரிவித்துள்ளார்.

## ஜெபியுங்கள்

✦ வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாருக்கு சொந்த கல்லறை பூமி கிடைத்தமைக்காக...

✦ சென்ற மாதம் சகோதரர் ஆனந்தை இழந்த குடும்பத்திற்காகவும், வத்தலக்குண்டு சபையாருக்காகவும்...

✦ டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஊழியர் கூட்டத்திற்காக...

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத் துறை செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?
அ)கோகிலா அய்யர் ஆ)அரிதா கவுர் இ)துர்கா பானர்ஜி
2. தென் கிழக்கு ரெயில்வே மண்டலம் எது?
அ)ஜெய்ப்பூர் ஆ)கொல்கத்தா இ)மும்பை
3. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை நீக்கியவர் யார்?
அ)ரூஸ்வெல்ட் ஆ)ஜார்ஜ் வாஷிங்டன் இ)ஆபிரகாம் லிங்கன்
4. சீனாவின் காகித நாணயம் எது?
அ)பிசோ ஆ)லிரா இ)யுவான்
5. உலகிலேயே தொழிற்சாலை அதிகம் உள்ள நகரம் எது?
அ)ஹாங்கோ ஆ)டோக்கியோ இ)வாஷிங்டன்

விடைகள்: 1.கோகிலா அய்யர் 2.கொல்கத்தா 3.ஆபிரகாம் லிங்கன் 4.யுவான் 5.டோக்கியோ

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -22


சரித்திர ஆய்வு

## சரித்திரத்தில் இரட்சிப்பு - இரட்சகர்

## Salvation in History - Savior

**Bro. John S.Nathan**, Gospel Minister.
Christian City Church of Christ, Minjur -601 203, S.INDIA.
Mobile: 94444 43378

### இரட்சிப்பு - Salvation



உலக தோற்றத்திற்கு முன்பே, ஆதி மனிதயினத்தை, படைப்பதற்கு முன்பாகவே அவர்கள் தமக்கு கீழ்ப்படியாமல் தமது கட்டளைகளை கைக்கொள்ளாமலும் மீறிபாவம் செய்வார்கள் என்பதை அறிந்திருந்தும், அவர்கள் தங்களின் பாவத்தால் கீழ்ப்படியாமையினால் பரிசுத்தரோடு சேர்ந்திருக்க முடியாது என்பதை முன்னமே அறிந்தவராய் (சாத்தானை மட்டுமே சபித்தபின்) ஆதாம், ஏவாளை நோக்கி "உனக்கும், ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" ஆதி.3:15 என்று தமது ஒரே பேரான, நேசக்குமாரனை உலக இரட்சகரான எம்பெருமான் இயேசுகிறிஸ்து உலகில் தோன்றின, தோன்றப்போகிற மனிதபாவங்களை, பாவமறியாதவர் பாரசிலுவையை சுமந்து, பிதாவிற்கு கீழ்ப்படிந்து அவரின் சித்தத்தையே நிறைவேற்றி, நம்மை பாவத்திலிருந்து விடுவித்து கழுவி சுத்திகரித்து நம்மை நீதிமானாக்கி சிலுவையில் வெற்றி வேந்தராக ஆவார் என்பதை 4000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியதோடமையாது, தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஆதிமனிதனும் அவனின் சந்ததியாரும் அறிந்து கொள்ளவும், பிரிக்கப்பட்ட மனிதன் திரும்பவும் பரிசுத்தமடையவும், தேவனின் மாறாத அன்பை, உறவை, ஐக்கியத்தை திரும்பப்பெறவும் முற்பிதாக்கள் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்ட நியாயபிரமாணத்திற்கு கீழ்ப்பட்ட மக்கள் அனைவரும் இரட்சகரின் சிலுவை மரணம் வரை வாழ்ந்தவர்கள் இரட்சகரைப்பற்றி பற்பல காலங்களில் தீர்க்கதரிசிகளின் மூலமாய் அறிந்திட வழிவகை செய்தார். என்றாலும் ஒரு தீர்க்கதரிசிக்கும் அவர்கள் கீழ்ப்படியவில்லை. எகிப்தின் அடிமைத்தனத்தினால் அல்லலுற்றவர்களின் பரிதவிக்கப்பட்டவர்களின் கொடுந்துயரை நேரில் கண்ட "எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும் செய்கையிலும் வல்லவனான் (மோசே) தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய (யூத) சகோதரர்கள் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத்தான். அவர்களோ அதை அறியவில்லை (அப்.7:22,25) ஆனால் அவர்களால் புறக்கணிக்கப்பட்ட அதே

மோசேயை தேவன் 40 ஆண்டுகளுக்கு பிறகு (கி.மு 1533-ல்) அழைத்து அவர்களுக்கு விடுதலை பெற்றிட வழிவகை செய்தார். தேவன் அனுப்பப்போகிற வாக்குத்தத்தத்தின் இரட்சகருக்காக (மேசியா) உலகம் காத்திருந்தபோது மகிழ்ச்சியுடன் தங்கள் வயிற்றில், தமது குடும்பத்தில் மேசியா பிறந்திட வேண்டுமென பல்லாயிரக்கணக்கான யூதகன்னிப்பெண்கள் ஜெபித்து காத்திருந்திருப்பார்கள். கன்னிமரியாளுக்கு அந்த பாக்கியம் கிடைத்தது.

இரட்சிப்பின் திட்டமானது தேவனுக்கும் பாவ மனித இனத்திற்குமிடையே இறுக கட்டப்பட்ட ஒரு பந்தமாக (Bond) உறவாக உள்ள மாபெரும் தேவதிட்டமாகும். இத்திட்டத்தின்படியே மனிதனுக்கு உதவிட மனிதர்களிடையே தலைவர்கள் எழும்பி அவர்களுக்கு வழிக்காட்டியாக விளங்கினர். ஆனாலும் அவர்களின் கீழ்ப்படியாமையினால் தேவ பந்தத்தை மறந்து அதனை மீறினபோது, அழிவை சந்தித்தபோது தங்களின் தவறை உணர்ந்து தேவனை தேடவும் அவரிடத்தில் தங்களின் இரட்சிப்பிற்காக வேண்டினர். இஸ்ரயேலர்கள் மறுபடியும் **கர்த்தரின்** பார்வைக்குப் பொல்லாப்புச் செய்து **கர்த்தரை சேவியாமல்** அவரைவிட்டுப் போய் அந்நிய தேவர்களை சேவித்தார்கள். கர்த்தர் அவர்களைப் பெலிஸ்தியர்கையிலும், அம்மோன்புத்திரர் கையிலும் விற்றுப்போட்டார். இஸ்ரயேலரை எல்லாம் நெருக்கினதினால் அவர்கள் மிகவும் நெருக்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் கர்த்தரை நோக்கிமுறையிட்டு உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம். அந்நிய தேவர்களை சேவித்தோம் என்றார்கள். (7அரசர்கள்) நான் உங்களை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவில்லையா? நீங்கள் அந்நிய தேவர்களைச் சேவித்தீர்கள், அவைகளே இனி உங்களை இரட்சிக்கட்டும் என்றார். அப்போது இஸ்ரயேலர்கள் கர்த்தரை நோக்கி: பாஞ்செய்தோம், தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும் **இன்றைய தினம் மாத்திரம்** எங்களை **இரட்சித்தருளும்** என்றதோடு அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு **கர்த்தருக்கு** ஆராதனை (Served the Lord) செய்தார்கள். (கி.மு 1183) அப்போது அவர் இஸ்ரயேலரின் வருத்தத்தைப் பார்த்து **மனதுருகினார்** (நியா.10:6-10). "அவர்கள் கீழ்ப்படியாதவர்களாகி, உமக்கு விரோதமாய்க் கலகம் பண்ணி, உம்முடைய நியாயப்பிரமாணத்தைப் புறம்பே எறிந்துவிட்டு அவர்களை திடசாட்சியாக கடிந்துகொண்ட உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்டு, கோபமூட்டுகிற பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள். சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தீர். அவர்கள் நெருக்கம் அநுபவிக்கிற காலத்தில் அவர்கள் உம்மை நோக்கி கூப்பிடுகிறபோதோ, நீர் பரலோகத்திலிருந்து கேட்டு உம்முடைய **மிகுந்த இரக்கத்தினால்**.... சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கிவிடுகிற **இரட்சகர்களை** (கி.மு.44-ல்) அவர்களுக்கு கொடுத்தீர்...உமக்கு முன்பாக மறுபடியும் பொல்லாப்பு செய்யத் தொடங்கினார்கள்.... அவர்கள் சத்துருக்கள் அவர்களை ஆளும்படிக்கு, அவர்கள் கையிலே ஒப்புவித்தீர், அவர்கள் மனந்திரும்பி, உம்மை கூப்பிட்ட போதோ, நீர்

பரலோகத்திலிருந்துகேட்டு.... உம்முடைய இரக்கத்தின்படியே அநேகந்தரம் விடுதலையாக்கிவிட்டீர்.... நீர் அநேக வருஷமாக அவர்கள்மேல் பொறுமையாயிருந்து...உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டாலும்; அவர்கள் செவிகொடாதபடியினாலே, அவர்களை அந்நிய தேவர்களின் கையில் ஒப்புக்கொடுத்தீர் (நெகே.9:26-30)... உம்முடைய மிகுந்த இரக்கத்தினபடியே, அவர்களை நிர்மூலமாக்காமலும், அவர்களை கைவிடாமலும் இருந்ததீர், நீர் கிருபையும் இரக்கமுமுள்ள தேவன் (வசனம் 31) "இஸ்ரயேலே நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய்; ஆனாலும் என்னிடத்தில உனக்குச்சகாயம் உண்டு... இப்போதும் உன்னுடைய எல்லாபட்டணங்களிலும் உன்னை இரட்சிக்கும் ராஜா எங்கே? உன் நியாயாதிபதி எங்கே? நான் கோபத்திலே உனக்கு ராஜாவை கொடுத்தேன்; என் உக்கிரத்திலே அவர்களை எடுத்துக்கொண்டேன் ஓசியா 13:5-11 (கி.மு.725) ஆனாலும் பழைய ஏற்பாட்டின் இரட்சிப்பின் சரித்திரத்திலே பக்தியுள்ள மக்கள் கடந்த நாட்களில் தேவன் தங்களுக்குச் செய்த நன்மைகளை எண்ணி, எண்ணி அவரை துதித்தார்கள், நன்றி செலுத்தினார்கள், போற்றினார்கள் சங்.116,107 அதிகாரங்கள். 2நாளா.20:9 என்பதை அறியலாம். இதோ, தேவன் எனக்குச் சகாயர், ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களோடே இருக்கிறார் சங்.54:1-4.

இஸ்ரயேலர்கள் எகிப்தின் அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்றபிறகு வாக்குத்தத்தத்தின் தேவனானவர் கானான் தேசத்தை பெற்றுக்கொண்ட பின் அவர்களை அழைத்து அவர்களைத் தமது சொந்த மக்களாகவே தொடர்ந்து பாவித்துவந்தார். அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் ஏற்றவேளையில் கொடுத்து காப்பாற்றி வழிநடத்தினார். சங்.105:23-40. கேட்டார்கள் அவர் காடைகளை (45கி.மீட்டர் தூரம் 3 அடி உயரம் வரை உள்ள பறவைகளை, வரப்பண்ணினார். வான அப்பத்தினால் அவர்களை திருப்தியாக்கினார் சங்.105:40. "அவர் பூர்வ நாட்களையும் மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவுகூர்ந்து .... தமக்கு மகிமையுள்ள கீர்த்தியை உண்டாக்கும்படி உம்முடைய ஜனத்தை நடத்தினீர்" ஏசா.63:11-14.

## இரட்சகர் - Savior

உலகில் உள்ள எல்லாவற்றையும் படைத்த தேவனுடன் ஆதிமனிதன் கொண்டிருந்த உறவு, அன்பு, ஐக்கியம் நீங்குவதற்கு காரணமாயிருந்த சாத்தானின் சொற்படி விலக்கப்பட்ட தீங்கனியை உண்டதினால் பாவிகளாகும்படிக்கு காரணமாயிருந்த அவனை அழிக்கும்படியாக ஸ்திரீயின் வித்திலிருந்து பிறக்கப்போகும் வெற்றிவேந்தரும் உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் பெரியவரும், தேவ பிதாவானவர், உலக மக்களை இரட்சிக்க இரட்சகராக அனுப்பியவரும் (ஆபிரகாமிற்கு வாக்களித்தவரும் (கலா.3:6-20; ஆதி.12:1-3). நமது பாவ வினையை போக்குவதற்காக சிலுவையில் மரிக்க ஒப்புக் கொடுக்கப்பட்ட இரட்சகர் இயேசு கிறிஸ்துவை தேவனும் ஆண்டவரும் கிறிஸ்துவு

(பிரித்தெடுக்கப்பட்ட, அபிஷேகம் பண்ணப்பட்டவரும்) மாக்கினாரென்று இஸ்ரயேல் (யூதர்கள்) யாவராலும் நிச்சயமாய் அறியப்படவேண்டியவரும் (அப்.2:36) நமக்குள்ளே வாசம்பண்ணுகிறவரும் (யோவா.1:4) வானத்தின் கீழெங்கும் மனிதர்யாவருக்கும் இரட்சிப்படையும்படி கட்டளையிடப்பட்டவரும் நமக்காக உலகிற் அனுப்பப்பட்டவரும் (அப்.4:12) உலகின் பாவங்களை நிவர்த்திபண்ணுகிறவரும், அதற்காகவே முன்னறிவிக்கப்பட்ட, அபிஷேகம் பண்ணப்பட்டவரும் முதல் பிரபுவுமாகிய "மேசியா" தானி.9:24,25 உலகத்தால் ஒடுக்கப்படும்போது அவர்களுக்காக அனுப்பப்பட்டவரும் ஒரே இரட்சகரும் ஏசா.19:20 ஒரே கர்த்தரும் இரட்சகருமான (ஏசா.43:11) வரும் இஸ்ரயேலுக்கும் உலகின் மக்களினம் மனந்திரும்பிடவும், பாவ மன்னிப்பளிப்பவரும் அதிபதியும் இரட்சகருமானவரும் (அப்.5:31) தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் யாவரும் இரட்சிக்கப்படவும், நித்திய மகிமையை பெற்றுக்கொள்ள காரணரும் (2தீமோ.2:10) தாவீதுக்கு ஆண்டவருமான (மத்.22:45) "எல்லா மனுஷரும், குறிப்பாக விசவாசிகளுக்கு இரட்சகரும் 1தீமோ.4:10 எகிப்திலே பெரிய கிரியைகளையும், காமின்தேசத்திலே அதிசயங்களையும், சிவந்த சமுத்திரத்தண்டையிலே பயங்கரமானவைகளையும் செய்த இரட்சகரும் சங்.106:21,22 பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் சொல்லப்பட்ட கர்த்தரும் இரட்சகருமான 2பேது.3:12 ஒரே இரட்சகர் (SOTER கிரேக்க மொழியில் இரட்சகர்) இயேசு கிறிஸ்துவை உலகமக்களும் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களும் அவரையும்,அவரின் எளிய இனிய போதனைகளையும் அன்பு கட்டளைகளையும் நம்மில் அநேகர் புரிந்துகொள்ளவும், அறிந்துகொள்ளவுமில்லை. இனியும் நாம் தொடர்ந்து அறியாதிருப்பது நமக்கு ஏற்றதல்லவே!

இன்றைக்கு சுமார் 2005 ஆண்டுகளுக்கு முன்பாக, சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதில்லை.... ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" ஆதி.49:10 (கி.மு.1689). ".....பெத்லகேமே....இஸ்ரயேலை ஆளப்போகிறவர்....என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய (உலக தோற்றத்திற்கு முன்பே) பூர்வத்தினுடையது" (from of old, from everlasting) மீகா5:2. கி.மு.710. "...இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு "இம்மானுவேல்" (தேவன் நம்மோடிருக்கிறவர்) என்று பேரிடுவாள்" ஏசா.7:14 (கி.மு742). "......நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்;....சமாதானப்பிரபு எனப்படும் ஏசா.9:6. "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" லூக்.2:11 (கி.மு.4-ம் ஆண்டு). பரலோக பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினார் 1யோவா.4:14. நமக்காக அனுப்பப்பட்ட இரட்சகரை நமக்கு சொந்தமாக்கிக் கொண்டு.... அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள் (யோவா.2:5). அப்போதுதான், அவர் நமக்காக ஆயத்தமாக்கியுள்ள பரலோகத்தில் பிரவேசித்து, அங்கு அவருடன் ஆட்சிபுரிய முடியும்.

சிறுவர் பகுதி

# பொய் தீர்க்கதரிசி

வேத பகுதி: **எரேமியா28:1-17**



பழைய ஏற்பாட்டு புத்தகத்திலே அநேக தீர்க்கதரிசிகளைக் குறித்து படித்தும், கேள்விப்பட்டும் இருப்பீர்கள். எரேமியாவின் நாட்களில் அனனியா என்கிற ஒரு தீர்க்கதரிசியுமிருந்தான். அவனோ எரேமியாவின் வார்த்தைக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னான். என்னவென்று கேட்கிறீர்களா?

இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து பாபிலோனுக்கு எடுத்துக் கொண்டுபோன கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையெல்லாம் நான் இரண்டு வருஷகாலத்திலே இவ்விடத்துக்குத் திரும்பக் கொண்டுவரப் பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்களும் சகல ஜனங்களும் பார்த்திருக்க எரேமியாவை நோக்கி சொன்னான்.

எரேமியாவோ நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும்; பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று முன்னமே சொல்லியிருந்தான். அனனியாவோ இரண்டுவருஷகாலத்திலே இவ்விடத்துக்கு வரும் என்றான். தீர்க்கதரிசி சொன்னபடி நடந்தால், அவனே மெய்யான தீர்க்கதரிசி. அனனியா சொன்னபடி நடக்கவில்லை திரும்பவும் கர்த்தர் எரேமியாவோடே பேசி; நீ போய், அனனியாவை நோக்கி: நீ மரநுகத்தை உடைத்தாய்; அதற்குப்பதிலாக இருப்பு நுகத்தை உண்டுபண்ணு என்று கர்த்தர் சொன்னார். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரைச் சேவிக்கும்படிக்கு இருப்பு நுகத்தை இந்த எல்லா ஜாதிகளுடைய கழுத்தின்மேலும் போட்டேன் என்றான். அனனியாவோ பொய் சொன்னதினால் அவ்வருஷத்திலே ஏழாம் மாதத்திலே செத்துப்போனான். பொய் சொன்னதாலே அவனுக்கு மரணம் வந்தது கர்த்தர் சொல்லாத காரியத்தை கர்த்தர் சொன்னார் என்றால் இப்படித்தான் சம்பவிக்கும். ஆகையால் நீங்கள் பொய் சொல்லாமல் தேவசமூகத்தில் உண்மை பேச கற்றுக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்:**

“அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்; நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரேமியா29:9).

# வேத அறிவுப் போட்டி எண்.111

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்

1. கிதியோனுடைய கர்ப்பப்பிறப்பான குமாரர் எத்தனைபேர்?
2. ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்று பவுல் எந்த சபைக்கு எழுதுகிறார்?
3. கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறபடி, எந்தக்கோத்திரத்திற்கு அவரே அவர்களுடைய சுதந்தரம்?
4. விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள விதவையானவள் எத்தனை வயதுக்கு குறையாதவளாயிருக்கவேண்டும்?
5. தூக்கிப்போடப்பட்டவன் யாரால் சபிக்கப்பட்டவன்?
6. அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் எதினாலே வெளியரங்கமாக்கினார்?
7. தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி? என்றவன் யார்?
8. நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள் என்று பவுல் யாருக்கு எழுதுகிறார்?
9. செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், அடையாளமான எழுதுக்களை உங்கள்மேல் என்ன செய்துகொள்ளமலும் இருப்பீர்களாக; என்று கர்த்தர் சொல்லுகிறார்?
10. கிறிஸ்து இயேசுவினிமித்தம் பவுலோடு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் லூக்காவும் ஒருவரா?

**Website: www.thewordofchristindia.com**

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" யோவான்14:15

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Nov .2009.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in
Website: www.thewordofchristindia.com

ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள
யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

உங்கள் வானொலியில்
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனி கிழமை மாலை 5.30 முதல் 5.45 மணி வரை கேளுங்கள் மேலும்
உங்கள் தொலைக்காட்சியில்
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Wednesday 6.30 - 6.45 a.m

மாத இதழ் மற்றும் வேதபாடம்
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்
டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

அனைத்து
தொடர்புக்கும்

**Monthly Magazine**

**To**

*If undelivered please return to:*
**From**

**Editor**
**THE WORD OF CHRIST**
**P.O.Box-5**
**Batlagundu - 624 202**
**S.INDIA.**